**சுருக்கம்**

சினிமா - தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957 - தமிழக திரையரங்குகளில் சாலை பாதுகாப்பை வலியுறுத்தி எடுக்கப்பட்ட "பச்சை விளக்கு" சமூக விழிப்புணர்வு திரைப்படத்தை காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை சிறப்பு காட்சியாக தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் 01-05-2024 முதல் 15-06-2024 வரை திரையிட அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**உள் (சினிமா) துறை**

**அரசாணை (வாலாயம்) எண்.308** **நாள்: 26.04.2024**

**குரோதி, சித்திரை மாதம் 13-ம் நாள்,**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**

**படிக்க:**

1. போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகத்திடமிருந்து வரப்பெற்ற கடித எண்.005791/1/2024, நாள் 23.02.2024.
2. டிஜிதிங்க் மீடியா ஒர்க்ஸ் நிறுவனத்தினரிடமிருந்து வரப்பெற்ற 29.02.2024-ம் நாளிட்ட மனு.
3. கூடுதல் தலைமை செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.வ.நி.9(1)/e-6023630/2023, நாள் 08.03.2024.
4. காவல் துறை தலைமை இயக்குநர்/ காவல் ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.Rc.No.E2(1)/30/15916/2024, நாள் 04.04.2024.

----------

**ஆணை:**

முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஆணையர், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை சாலை பாதுகாப்பை மையமாகக் கொண்ட "பச்சை விளக்கு" என்ற தமிழ்த் திரைப்படத்தை டிஜிதிங்க் மீடியா ஒர்க்ஸ் நிறுவனம், தயாரித்துள்ளதாகவும், இந்த படம் 2019-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது எனவும், மத்திய திரைப்பட தணிக்கை வாரியத்தால் "U" சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும், முழுப் படமும் சாலை விதிகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டதாகவும், பல சர்வதேச விருதுகளைப் பெற்றதாகவும், இப்படத்தினை சாதாரண காட்சிகளை தவிர, சிறப்பு காட்சியாகவும் காட்சிப்படுத்துமாறு டிஜிதிங்க் மீடியா ஒர்க்ஸ் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், பயணம் செய்யும் போது

சாலைப் பயணிகளின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று முழுப் படமும் வலியுறுத்தி வருவதால், பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பிற சாலைப் பயணிகளிடையே சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் இப்படத்தை சிறப்புக் காட்சியாகக் திரையிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், டிஜிதிங்க் மீடியா ஒர்க்ஸ் நிறுவனம், சாலை பாதுகாப்பை வலியுறுத்தி எடுக்கப்பட்ட "பச்சை விளக்கு" சமூக விழிப்புணர்வு திரைப்படத்தை காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரையிலான சிறப்பு காட்சிகளிலும் 15-03-2024 முதல் 15-06-2024 வரை தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரையிட அனுமதி வழங்குமாறு கோரியுள்ளனர்.

3. மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமை செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் தனது குறிப்புரையில், இந்நேர்வில் அரசு அளவில் முடிவு செய்திடவே, அதிகார வரம்பு சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளது என்றும், திரையரங்குகளில் சிறப்பு காட்சிகள் நடத்தும் நேரத்தை அதிகப்படுத்துவதால், சுகாதார குறைபாடுகள் மற்றும் கூட்ட நெரிசல் ஏதும் ஏற்படாமலும் திரைப்படம் காண்போரின் போக்குவரத்து பாதிக்கப்படாத வகையிலும், காவல் துறையினரின் ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு பெறுவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும் என்றும், மேலும், மக்கள் மற்றும் பார்வையாளர்கள் திரளாக உள்ளே வரவும், சிரமமின்றி வெளியேறவும், திரையரங்கத்தினை சுத்தம் செய்து சுகாதாரமாக பராமரிக்கவும், போதுமான கால இடைவெளியுடன், உரிய பாதுகாப்பு நடைமுறைகளுடன், சிறப்பு காட்சிகள் அனுமதி வழங்குவது குறித்து, தமிழ்நாடு சினிமா சட்டம் மற்றும் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு, அரசளவில் முடிவெடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

4. நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், காவல் துறை தலைமை இயக்குநர்/காவல் ஆணையர் அவர்கள் தனது குறிப்புரையில், காவல் துறை தரப்பில், இத்திரைப்படம் சாலை விழிப்புணர்வை பற்றி தெரியப்படுத்துவதுடன், சாலையில் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வது குறித்து, பொதுமக்களிடையே பொறுப்புணர்வை உறுதிப்படுத்துகிறது. எனவே, மேற்கண்ட இத்திரைப்படத்தினை காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை சென்னையில் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் 15-03-2024 முதல் 15-06-2024 வரை திரையிடுவது குறித்து, காவல் துறையை பொறுத்தவரை, எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

5. ஆணையர், போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், கூடுதல் தலைமை செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர்/காவல் ஆணையர், சென்னை ஆகியோர்களின் குறிப்புரையின் அடிப்படையில், டிஜிதிங்க் மீடியா ஒர்க்ஸ் நிறுவனத்தின் கோரிக்கையினை ஏற்று, சாலை பாதுகாப்பை வலியுறுத்தி எடுக்கப்பட்ட "பச்சை விளக்கு" என்ற சமூக விழிப்புணர்வு திரைப்படத்தை காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை சிறப்பு காட்சியாக, தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் 01.05.2024 முதல் 15.06.2024 வரை திரையிட 1955-ம், ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், பிரிவு 11-ல், வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, 1957-ம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் உள்ள 'சி' படிவ நிபந்தனை 14 மற்றும் 14-A-வினை தளர்த்தி, இது குறித்து முன்கூட்டியே உரிமம் வழங்கும் அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்ட கேளிக்கை வரி அதிகாரிக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திரையிட அனுமதிக்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ. அமுதா**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

உரிமையாளர்,
டிஜிதிங்க் மீடியா ஒர்க்ஸ் நிறுவனம்,
எண்.679, இரண்டாவது தளம், நான்காவது தெரு,
W-பிளாக், D செக்டார், அண்ணா நகர், சென்னை 600 101.
போக்குவரத்து ஆணையர்,
சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை – 32.
கூடுதல் தலைமைச் செயலாளர் /
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5.
உரிமம் வழங்கும் அலுவலர் / மாவட்ட ஆட்சியர்கள்
(சென்னையை தவிர்த்து)
உரிமம் வழங்கும் அலுவலர் / காவல் ஆணையர், சென்னை -7.

**நகல்:**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, சென்னை-9.
உதிரி நகல்/இருப்பு கோப்பு.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

26/4/2024

**பிரிவு அலுவலர்.**